# இயல் 6.1 - எண்கள்

பயிற்சி எண் :: 6.1.7.7.A

எண்கள் - மீச்சிறு பொது மடங்கு - (மீ.சி.ம.)
Least Common Multiplier (LCM) - வரையறை

## எண்கள் - மீச்சிறு பொது மடங்கு - (மீ.சி.ம.) Least Common Multiplier (LCM) - வரையறை

இரு முழு எண்களின் மீச்சிறு பொது மடங்கு என்பது அவ்விரு எண்களின் மிகச் சிறிய பொது மடங்கு ஆகும்.
உதாரணமாக, 6 எனும் எண், 2 மற்றும் 3 ஆகிய முழு எண்களின் மீ.சி.ம. ஆகும்.

| 2-ஆம் வாய்ப்பாடு | | 3-ஆம் வாய்ப்பாடு | |
|---|---|---|---|
| 1 X 2 = | 2 | 1 X 3 = | 3 |
| 2 X 2 = | 4 | 2 X 3 = | 6 |
| 3 X 2 = | 6 | 3 X 3 = | 9 |
| 4 X 2 = | 8 | 4 X 3 = | 12 |
| 5 X 2 = | 10 | 5 X 3 = | 15 |
| 6 X 2 = | 12 | 6 X 3 = | 18 |
| 7 X 2 = | 14 | 7 X 3 = | 21 |
| 8 X 2 = | 16 | 8 X 3 = | 24 |
| 9 X 2 = | 18 | 9 X 3 = | 27 |
| 10 X 2 = | 20 | 10 X 3 = | 30 |

### மீ.சி.ம. (LCM)

1. வாய்ப்பாட்டில் காண்பதுபோல் இரு எண்களுக்கு இடையில் வரும் பொது மடங்குகள் எண்ணிலடங்காது நீண்டுகொண்டு செல்கின்றன. ஆனால், நாம் மீ.சி.ம-விற்காக கருத்தில் கொள்வது அதன் முதல் மடங்கு மட்டுமே ! . . .
2. மீச்சிறு பொது மடங்கை, நாம் மீ.சி.ம. (2,3) = 6 எனவோ அல்லது மீ.சி.ம.(3,2) = 6 எனவோ குறிப்பிடுவோம்.
3. (a) வகுத்தல் முறை மற்றும் (b) பகாக் காரணிமுறை என இரு முறைகளிலும் மீ.சி.ம.-வை கண்டுபிடிக்கலாம்.

Sum & solution prepared on Wednesday 27th October, 2021 :: 10:55 Hrs.

All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.